# 4

# மரித்தவர்களின் இடைப்பட்ட நிலை

*“அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: ‘நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள்’ என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: ‘நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்க வில்லையே’ என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ‘ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்’ என்றான். இயேசு அவனை நோக்கி: ‘இன்றைக்கு நீ என்னு டனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன்’ என்றார்” (லூக். 23:39-43).*

*மரணத்தின்போது ஆத்துமாவானது சரீரத்தை விட்டுப் பிரிகிறது. ஆத்துமா பிரிந்த பின்பு,[1] இனியும் ஒருவர் சரீரம் என்ற போர்வை அணிவிக்கப்பட்டிருப்பதில்லை (2 கொரி. 5:1-8). பேதுரு, “என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து, இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பி விடுவது நியாயமென்று எண்ணுகிறேன்” (2 பேது. 1:13, 14) என்று எழுதினார். பேதுரு, மரணத்தின் போது உடலை விட்டு நீங்கி ஆவியுடன் ஆவிக்குரிய வட்டா ரத்தில் பிரவேசிக்கின்ற தமது ஆத்துமாவைக் குறிப்பிட்டார். அவர் - அதாவது அவரது உள்ளான மனுஷனாகிய ஆத்துமா - தமது உடலைக் கிடத்தி விட்டு நீங்கிச் செல்லவிருந்தார். இதிலிருந்து நாம், ஒரு நபர் மரிக்கின்றபோது, அவர் தனது உடலை விட்டு நீங்கித் தமது ஆவியில், உருமற்ற மற்ற எல்லா ஆவிகளுடனும் இருக்கும்படி செல்லுவார் என்று முடிவு செய்ய இயலும்.*

*வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான், மரித்துக் கடந்து சென்றவர் கள் பலிபீடத்தின் கீழாகவும் பின்பு அரியணைகளிலும் இருந்ததாகச் சித்தரித்தார் (வெளி. 6:9; 20:4). “கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக் களை ... கண்டேன்” என்ற அவரது கூற்று, இனியும் தங்கள் சரீரங்களில் இராத மரித்தவர்களைப் பற்றி அவர் எழுதினார் என்று சுட்டிக்காண்பிக் கிறது. ஒரு நபருடைய ஆத்துமா அவரது சரீரத்தை விட்டு நீங்கும்போது, அவர் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கும் ஒரு “இடை நிலைக்குள்”*

*செல்லுகின்றார். அப்படிப்பட்ட இடத்தில், ஆத்துமாக்கள் உணர்வுடன் இருக்கின்றனவா அல்லது உணர்வற்ற நிலையில் இருக்கின்றனவா? அவர்கள் தங்கள் நிலையை மாற்றுவதற்கு அல்லது அவர்கள் இருக்கும் இடத்தை மாற்றிக் கொள்வதற்கு ஏதேனும் செய்ய முடியுமா? அவர்களுக்கு நாம் உதவ முடியுமா மற்றும் அவர்கள் நமக்கு உதவ முடியுமா? அவர்கள் தங்கள் பாவங்களுக்காகப் போதுமான அளவு தற்காலிகத் தண்டனை பெறும் வரையில் இருக்கக் கூடிய உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்லுகின்றனரா, பின்பு அவர்கள் பரலோகத்திற்குள் பிரவேசிக்கின்றனரா? இரட்சிக்கப் படுவதற்கு இரண்டாவது வாய்ப்பு ஒன்று உள்ளதா?*

## *பாதாளம்* (SHEOL AND HADES)

*மரித்தவர்கள் பாதாளத்திற்கு* (Sheol) *செல்லுகின்றனர் என்று பழைய ஏற்பாடு போதிக்கிறது; புதிய ஏற்பாட்டில்* Hades *என்பது இதற்கு இணையானதாக உள்ளது. Sheol என்ற எபிரெய வார்த்தை பழைய ஏற்பாட்டில் 65 முறைகள் காணப்படுகிறது, இது* KJV *வேதாகமத்தில் ''நரகம்''* (hell) *என்று 31 முறைகளும், ''கல்லறை''* (grave) *என்று 31 முறைகளும், "குழி"* (pit) *என்று 3 முறைகளும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. Sheol என்பதை "நரகம்" என்று மொழிபெயர்த்தலானது தவறாக வழிநடத்துவதாக உள்ளது. நரகம் என்பது நித்திய அக்கினி உள்ள இடமாக இருக்கிறது.* Sheol *என்பது மரித்தவர்கள் செல்லும் இடமாக உள்ளது. யாக்கோபு, தாம்* "Sheol" *என்ற இடத்திற்குச் செல்லுவதாகக் கூறினார் (ஆதி. 37:35;* NASB, RSV; *இது* KJV *மற்றும்* NKJV *ஆகியவற்றில் "கல்லறை"* (the grave) *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). யாக்கோபு, எரிகின்ற உபத்திரவம் உள்ள இடத்தில் தாம் இருப்பார் என்று அர்த்தப்படுத்தியிருக்க மாட்டார் என்பது உறுதி. அவர் மரித்தவர்கள் இருக்கும் இடத்திற்குத் தாம் செல்லுவதாக அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும்.*

*துன்மார்க்கர்* Sheol *என்ற இடத்திற்குச் செல்லுவார்கள் என்று அச்சுறுத்தப்படுகின்றபடியால்,* Sheol *என்பது துன்மார்க்கர் மாத்திரம் செல்லும் இடம் என்று சிலர் கருதியுள்ளனர். நாம் யாவரும்* Sheol *என்ற இடத்திற்குச் செல்லுவோம் என்பதாகக் காணப்படுகிறது (ஆதி. 37:35; ஏசா. 14:9).* Sheol *என்ற இடம் பற்றிய அச்சுறுத்தல் துன்மார்க்கருக்கானது (சங். 9:17; 55:15; நீதி. 23:14) என்பது, ஒருவேளை உடனடியான மரணம் என்பது அவர்களின் தண்டனையாக உள்ளது என்பதை மாத்திரம் சுட்டிக்காண்பிக்க லாம், இதற்கு நேர்மாறாக நீதிமான்களுக்கு ஒரு சாதாரணமான ஆயுசுக் காலம் ஆசீர்வாதமாக உள்ளது (எசே. 18:4, 9). இது உண்மையாக இருக்கிறது என்றால்,* Sheol *என்பது நீதிமான்கள் மற்றும் துன்மார்க்கர் ஆகிய எல்லாருமே மரணமடையும்போது செல்லும் இடமாக உள்ளது.*

*செப்துவஜிந்த்*[2] *மொழிபெயர்ப்பு,* Sheol *என்பதற்கு இணையாக hades என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகிறது, இது போன்றே பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காண்பிக்கும் இடத்தில் புதிய ஏற்பாடும்*

*செய்கிறது (சங். 16:10; அப். 2:27, 31). Hades என்ற கிரேக்க வார்த்தை "மறைவான" அல்லது "காணப்படாத" என்று அர்த்தப்படுகிறது (இது* KJV*யில்* hell *என்றும் பெரும்பாலான மற்ற பதிப்புகளில்* "Hades" *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது), இது புதிய ஏற்பாட்டில் பத்து முறை வருகிறது. ஒருமுறை, கையெழுத்துப் பிரதியின் பலத்த ஆதாரம் இன்றி மாறுபட்ட வகையில் இது "கல்லறை" என்று* (KJV*யிலும்; "பாதாளம்" என்று தமிழிலும்) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (1 கொரி. 15:55). Sheol என்ற வார்த்தையோ அல்லது Hades என்ற வார்த்தையோ எரிக்கும் உபத்திரவம் உள்ள இடத்தைக் குறிக்கும் "நரகம்"* (hell) *என்று மொழிபெயர்க்கப்படக் கூடாது. "நரகம்"* ("hell") *அல்லது நித்திய வேதனை என்று அர்த்தப்படும் போது gehenna என்ற கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்படுகிறது.*

## பாதாளத்தின் இயல்பு

*ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரைப் பற்றிக் கூறியதில் இயேசு, பாதாளத்தைப் பற்றிய ஒரு விரிவான சித்தரிப்பைக் கொடுத்தார் (லூக். 16:19-31). இந்த விவரத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும், இயேசு ஒரு உண்மையான நிகழ்ச்சியைப் பற்றிப் பேசினார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன.*

*இயேசு உவமைகளைக் கூறும்போது, பல இடங்களில் அவர், கலந்துரையாடியது வேறு ஏதோ ஒன்றை "போல்" இருந்தது என்று கூறியதன்மூலம் அவைகள் உவமைகளாய் இருந்தன என்று சுட்டிக்காண்பித்தார்.*[3] *மற்ற இடங்களில், அவர் உவமைகளைக் கூறும்போது, தாம் உவமையைக் கூறுகின்றதை சுட்டிக்காண்பிக்கும் ஒப்பீட்டு வார்த்தை எதையும் பயன்படுத்தாதிருந்தார்; ஆனால் அது உவமையாக இருந்தது என்பதைச் சந்தர்ப்பப் பொருள் வெளிப்படுத்திற்று.*[4] *இயேசு கூறிய உவமைகள் எப்போதுமே நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரைப் பற்றி அவர் கூறியது ஒரு விதிவிலக்காக இருக்கும்பட்சத்தில், உண்மை நிலைக்கு நேர்மாறானவையாய் இருக்கும், மற்றும் உண்மையாயிருக்கக் கூடாதவைகளாயிருக்கும் எதையும் ஒருக்காலும் அவர் உள்ளடக்கியதில்லை. இந்தக் காரணத்தினால், லாசருவைப் பற்றிய விவரம் ஒரு உண்மையான நிகழ்ச்சியாக உள்ளது அல்லது குறைந்தபட்சம், நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளைப் பற்றிய ஒரு விவரிப்பாக உள்ளது என்று நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.*

*ஆங்கில மொழி வேதாகமத்தில்* "certain" *என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள tis என்ற கிரேக்க வார்த்தையானது (லூக். 16:19, 20; தமிழில் இவ்வாறு இல்லை) ஐசுவரியவான், லாசரு ஆகிய இருவரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. Tis என்ற வார்த்தை குறிப்பிட்ட, அறியப்பட்ட மக்களைக் குறிக்க சீராகப் பயன்படுத்தப்பட்டது. லூக்காவின் எழுத்துக்களில் இருந்து வருகிற மாதிரி மாத்திரமேகூட, இது உண்மையாக உள்ளது என்று காண்பிக்கிறது.*[5] *உண்மையிலேயே இருந்த இரண்டு மனிதர்களைப் பற்றி இயேசு பேசிக்கொண்டிருந்தார். இது அவருடைய நோக்கமாக*

இல்லாதிருந்தது என்றால், அவர் அந்த இரண்டு மனிதர்களைப் பற்றிக் குறிப்பிட்ட போது, *tis* என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்க மாட்டார். லாசருவைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டதும் கூட, இயேசு உண்மையான ஒரு நபரைப் பற்றிக் குறிப்பிட்டார் என்பதற்குத் தனிச்சிறந்த சுட்டிக் காண்பித்தலாக உள்ளது. உண்மையில், இந்த ஒரு உவமையில்தான் ஒருவர் உண்மையில் பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்விதமாக, இந்தக் கதையைப் பரிசோதனை செய்து பார்ப்பதில் இருந்து, நாம் பாதாளத்தைப் பற்றிய சில கேள்விகளுக்குப் பதில்களைக் கண்டறிய முடியும்.

(1) நீதிமான், துன்மார்க்கன் ஆகிய இருவருமே பாதாளத்திற்குச் செல்லுகின்றனர். ஐசுவரியவானும் லாசருவும் அங்கே சென்றனர்.

(2) துன்மார்க்கர் வதைபடும் இடத்தில் உள்ளனர், தண்டிக்கப் படுகின்றவர்களுக்கு நிம்மதி என்பதே கிடைக்காது.

(3) நீதிமான்கள் ஆறுதலின் இடத்தில் உள்ளனர்.

(4) எல்லாருமே தங்கள் அடையாளத்தைத் தக்கவைத்துள்ளனர், ஒவ்வொருவரும் பூமியில் என்ன நடந்தது என்பதை நினைவில் வைத்துள்ளனர்.

(5) எல்லாரும் தங்களைச் சுற்றியுள்ளவைகளைக் குறித்து உணர்வுள்ளவர்களாய் இருக்கின்றனர்.

(6) துன்மார்க்கர் "பெரும் பிளப்பு" ஒன்றினால் நீதிமான்களிடத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிளப்பு நீதிமான்களையும் துன்மார்க்கரையும் முன்னும் பின்னுமாகக் கடந்து செல்லுவதில் இருந்து தடை செய்கிறது.

(7) எல்லாரும் மற்றவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளக் கூடியவர்களாய் இருக்கின்றனர்.

(8) உருவமற்ற வட்டாரத்திற்குள் ஒவ்வொருவரும் அடையாளம் காணப்படக் கூடியவர்களாய் இருக்கின்றனர்.

(9) பூமியில் மக்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டுள்ளனர். ஐசுவரியவானின் சகோதரர்கள் பூமியில் இன்னமும் உயிருடன் இருந்தனர்.

(10) உயிருடன் வாழ்ந்துகொண்டிருந்தவர்களிடத்திற்குத் திரும்பவோ அல்லது செய்தித்தொடர்பு கொள்ளவோ ஒருவராலும் முடியாதிருக்கிறது.

**பரதீசு**

பாதாளம் இரண்டு தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது (லூக். 16:26). இவைகளில் ஒன்று பரதீசு என்பதாக உள்ளது, இன்னொன்று வேதனையுள்ள இடம் என்பதாக உள்ளது.

சிலுவையில் இருந்த கள்ளனுக்கு இயேசு, "இன்றைக்கு நீ என்னு டனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார் (லூக். 23:43). "பரதீசு" (Gk.: *paradeisos*) என்பது "பூங்கா" என்று அர்த்தப்படுகிறது, இது பரலோகத்தைக் குறிப்பிடக்கூடிய வனப்பும் ஆறுதலும் நிறைந்த இடமாக உள்ளது (2 கொரி. 12:1-4; வெளி. 2:7) அல்லது இவ்விஷயத்தில் உள்ளது போல், மரித்த

*நீதிமான்கள் செல்லும் இடமாக உள்ளது. இயேசுவின் உடல் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தாலும் (லூக். 23:52, 53), அவரது ஆத்துமா பாதாளத் திற்குச் சென்றது (அப். 2:27, 31). இயேசு மரணத்தின்போது பரலோகத்திற்கு ஏறிச் சென்றிருக்கவில்லை, இது மகதலேனா மரியாளிடத்தில் அவர் உரைத்த கூற்றில் இருந்து தெளிவாகிறது: "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை" (யோவா. 20:17). இதிலிருந்து நாம், இயேசுவும் கள்ளனும் சிலுவையில் மரித்தபோது, அவர்கள் இருவருமே பாதாளத்தில், இளைப்பாறுதலும் வனப்பும் உள்ள பரதீசு என்று அழைக்கப் படும் பகுதிக்குச் சென்றனர் என்று முடிவு செய்ய இயலும்.*

*லூக்கா 16:22ல் உள்ள "ஆபிரகாமுடைய மடி" என்பது பரதீசைக் குறிக்கும் ஒருபொருட் பலசொல் என்று நினைக்கப்படுகிறது. நீதிமான்கள் மரிக்கின்றபோது பரதீசுக்குச் செல்லுகின்றனர். "ஆபிரகாமுடைய மடி" என்ற சொல்விளக்கம், லாசருவின்மீது ஆபிரகாம் கொண்டிருந்த அன்பை மாத்திரம் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கலாம். ஒரு ஏழை மனிதன் தனது மடியில் ஒரு ஆட்டுக்குட்டியை வளர்த்த விதத்தைப் பற்றி நாத்தான் கூறியிருந்தார் (2 சாமு. 12:3), இது அந்த ஆட்டுக்குட்டிமீது அவன் கொண்டிருந்த அன்பையும் பராமரிப்பையும் காண்பிக்கிறது. இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் அவரது மடியில் அல்லது மார்பில் சாய்ந்து கொண்டிருந்தார் (யோவா. 13:23), இது அந்த சீஷன்மீது இயேசு கொண்டிருந்த அன்பைக் குறிப்பதாக உள்ளது. இயேசு பிதாவின் மடியில் இருக்கின்றதாகக் கூறப்பட்டது (யோவா. 1:18), இது இயேசுவின்மீது தேவன் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதாக உள்ளது. பல யூதர்கள் எதிர்பார்த்திருக்கக் கூடியபடி, ஐசுவரியவான் ஆபிரகாமினால் அன்பு கூரப்படவோ அல்லது கனப்படுத்தப்படவோ இல்லை; மாறாக, ஏழையான லாசரு ஆபிரகாமின் ஏற்றுக்கொள்ளுதலைப் பெற்றான்.*

**வேதனையுள்ள இடம்**

*பாதாளத்தில் ஒரு "பெரும் பிளப்பு" பரதீசை, வாதையும் வலியும் மிகுந்த வேதனையுள்ள இடத்தில் இருந்து பிரிக்கிறது. "நரகம்"* ("hell") *என்று* KJV *மற்றும்* NASB *வேதாகமங்களில் துரதிர்ஷ்டவசமாக மொழிபெயர்க்கப் பட்டுள்ள tartaros என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது: "பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து" (2 பேது. 2:4). துன்மார்க்கரான தூதர்கள் அங்கிருப்பார்கள், ஆனால் பிற்பாடு அவர்கள் தங்களுடன் நீதியற்றவர்களும் சேரத் தண்டிக்கப்படும் இடமான "நித்திய அக்கினி"க்கு மாற்றப்படுவார்கள் (மத். 25:41). கீழ்ப்படியாத, மரித்தவர்களின் ஆவிகள் அங்கே சிறைவைக்கப்பட்டுள்ளன (1 பேது. 3:19, 20). நோவாவுக்குள் இருந்த கிறிஸ்துவினுடைய ஆவியின் மூலம் (1 பேது. 1:11), நோவாவின் வாயைப் பயன்படுத்தி (2 பேது. 2:5), இயேசு நோவாவின் காலத்தில் இருந்த மக்களுக்குப் பிரசங்கித்தார். அந்தச் செய்தியை அவர்கள் புறக்கணித்த காரணத்தினால், அவர்களின் ஆவிகள்,*

*பேதுரு தமது இரண்டாம் நிருபத்தை எழுதிய வேளையில், வேதனையுள்ள இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தன. பாதாளத்தின் [Sheol] இந்தப் பகுதி மோசேயின் பாடல் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது: "என் கோபத்தினால் அக்கினி பற்றிக்கொண்டது, அது தாழ்ந்த நரக மட்டும் [Sheol] எரியும்" (உபா. 32:22). வேதனையுள்ள இடம் என்பது பாதாளத்தின் [Sheol] தாழ்ந்த பகுதியாக உள்ளது.*

## சில தவறான கருத்துக்கள்

*மரித்தவர்களின் நிலைபற்றிப் பல்வேறு வகையான தவறான கருத்துக்கள் பற்றிக்கொள்ளப்பட்டுள்ளன.*

*1. முதலாவது, "மரித்தவர்களின் ஆத்துமாக்கள் இடம்மாற்றப்பட்டு மற்ற மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றின் உடல்களுக்குள் அல்லது உலகம் சார்ந்த பொருள்களுக்குள் திரும்ப வருகின்றன" என்ற கருத்து உள்ளது. நாம் மீண்டும் மீண்டும் மரிப்பதற்காக இந்த உலகத்திற்குத் திரும்பி வருவதில்லை. இந்தக் கருத்து எபிரெயர் 9:27ல் உள்ள, "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே" என்பது போன்ற வேத வசனங்களின் போதனையை மீறுகிறது. மரித்தவர்களைப் பொறுத்தமட்டில், "சூரியனுக்குக்கீழே செய்யப்படுகிற தொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை'' என்று எழுதப்பட்டுள்ளது (பிர. 9:6). நாம் யாவரும் இந்தப் பூமியில் ஒரே ஒரு வாழ்வை மாத்திரம் கொண்டுள்ளோம்; பின்பு நாம் ஒருக்காலும் பூமிக்குரிய இருப்பைக் கொண்டிராதபடிக்கு, ஆவிக்குரிய வட்டாரத்திற்குள் பிரவேசிப்போம்.*

*2. "ஆத்துமாவானது, மரித்தோரின் உயிர்த்தெழுதல் வரை நித்திரையில் இருக்கும் அல்லது இல்லாதொழியும்'' என்பது இன்னொரு தவறான கருத்தாக உள்ளது. யோவான் 11:11-13 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 4:14, 15 ஆகிய வசனங்களில், மரித்தோரைப் பற்றி "நித்திரை பண்ணுகிறவர்கள்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அது உடலின் தோற்றம் மற்றும் நிலை ஆகியவற்றை விவரிக்க மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. "நித்திரை" என்பது, உடலின் மரணம் என்பது முடிவானதல்ல, ஆனால் உறங்குகின்ற மனிதர் தொடர்ந்து வாழ்வைக் கொண்டிருப்பதுபோல், மரணத்திற்குப் பின்பும் வாழ்வு தொடருகிறது என்பதை உறுதிப்படுத்துகிற வகையில் பயன்படுத்தப்படும் உருவகமாக உள்ளது.*

*மரித்தவர்கள் நித்திரையில் இருப்பதால் அல்லது இல்லாதொழிவதால் ஒன்றும் அறியார்கள் என்று உரிமைகோர பிரசங்கி 9:5, 6ஐ, பயன்படுத்துதல் என்பது இவ்வசனப் பகுதியைத் தவறாக நடைமுறைப்படுத்துவதாக உள்ளது. அந்த எழுத்தாளர், இந்த வாழ்வுடன் மரித்தவர்களுக்குள்ள உறவை மாத்திரமே இவ்வசனங்களில் கலந்துரையாடினார். மரித்தவர்கள், இங்கு என்ன நடக்கிறது என்பதை அறியமாட்டார்கள் மற்றும் பூமிக்குரிய பலன்களைப் பெறமாட்டார்கள். அவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தில் நடப்பவற்றை அறிகின்றனர், மற்றும் அவர்கள் மரித்தவர்களின்*

*காணப்படாத உலகத்தில் உள்ளவற்றில் பங்கடைகின்றனர் (லூக். 16:19-31). இந்த வாழ்வு முடிந்த பின்பு அவர்கள் பலன் பெறுவார்கள் அல்லது தண்டனை பெறுவார்கள் (2 கொரி. 5:10; மத். 25:46).*

*3. "மரித்தவர்கள், உயிரோடிருப்பவர்களுடன் செய்தித் தொடர்பு கொள்ள முடியும், மற்றும் உயிரோடிருப்பவர்கள் ஒரு ஊடக நபரின் மூலம் மரித்தோருடன் செய்தித் தொடர்பு கொள்ள முடியும்" என்பது மூன்றாவது தவறான கருத்தாக உள்ளது. இது ஆவிகளுடன் தொடர்பு கொள்ளுதல் அல்லது ஆவியியம் என்பதாக உள்ளது. ஊடக நபராகச் செயல்படுகின்றவர்கள், வேதாகமத்தில் கடுமையாகக் கடிந்துகொள்ளப் படுகின்றனர்.[6] ஐசுவரியவானுடைய சகோதரர்களுடன் பேசும்படி திரும்பிச் செல்லுவதற்கு லாசரு அனுமதிக்கப்படவில்லை (லூக். 16:27-31). இங்கு என்ன நடக்கிறது என்பதைப் பற்றி மரித்தவர்கள் அறிவதில்லை மற்றும் பூமியில் நடக்கும் ஏதொன்றிலும் அவர்கள் இனி பங்கடைவதும் இல்லை.*

*4. "மரித்தவர்களிடம், 'புனிதர்களிடம்' அல்லது மற்றவர்களிடம் ஜெபிப்பதன் மூலம் நாம் அவர்களிடத்திலிருந்து உதவி பெற முடியும்" என்பது இன்னொரு தவறான கருத்தாக உள்ளது. மரித்துப் போன யாரேனும் ஒருவரல்ல, ஆனால் இயேசுவே நமது சகாயராக (எபி. 4:15, 16) மற்றும் நமது ஒரே மத்தியஸ்தராக (1 தீமோ. 2:5) இருக்கின்றார். அவர் நம்மைப் போன்று இருந்தார் என்பதால், அவர் நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்க முடியும் மற்றும் தமது தேவையில் அவர் நமக்கு உதவியளிக்க முடியும் (எபி. 2:17, 18; 4:15, 16).*

*5. "இந்த வாழ்வு முடிந்த பின்பு இரட்சிப்புக்கு இரண்டாவது வாய்ப்பு ஒன்றுவரும்" என்பது இன்னும் ஒரு தவறான கருத்தாக உள்ளது. இந்த வாழ்வுக்குப் பின்பு, துன்மார்க்கர் மற்றும் நீதிமான்கள் ஆகியோருக்கு இடையில் ஒரு பெரும் பிளப்பு உண்டாக்கப்படுகிறது என்று இயேசு சுட்டிக்காண்பித்தார். ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்திற்கு எவரும் கடந்து செல்ல முடியாது. நாம் இந்த உடலில் இருக்கையில் செய்த செயல்களின் அடிப்படையிலேயே நமக்கு நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் (2 கொரி. 5:10). இதன் காரணமாக, நாம் நமது உடல்களை விட்டு நீங்கியவுடன் நமது அடைவிடங்கள் முத்திரையிடப்படுகின்றன. தங்கள் பாவங்களில் மரித்தவர்கள் இயேசுவுடன் இருக்க முடியாது (யோவா. 8:21). ஆகையால், "இப்பொழுதே இரட்சணிய நாள்" (2 கொரி. 6:2) என்றுள்ளது.*

*6. "மரணத்திற்குப் பின்பு, ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பு நாள் வரையிலும் இருப்பதற்கு உத்தரிப்பு ஸ்தலம் என்ற இடத்திற்குச் செல்லுகின்றன[ர்]" என்ற உத்தரிப்பு ஸ்தலத்தின் தவறான கருத்தும் உள்ளது. இந்த போதனையின்படி, பாவங்கள் மன்னிக்கப்பட்டாலும், பாவியாயிருந்தவர் தமது பாவங்களுக்கு முழுமையான தெய்வ தண்டனை பெற்று பரலோகம் செல்லத் தகுதியாகும்படி தற்காலிக தண்டனையைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த வாழ்வில் போதுமான அளவு துன்பம் சகிக்கப்படவில்லை என்றால், பாவியாயிருந்தவர் உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படுவார் என்பதே இதன் கருத்தாக உள்ளது. ஒருவருடைய குற்றத்தின் அளவுக்குத் தக்காற்போன்று அவர் உத்தரிப்பு ஸ்தலத்தில் இருக்க*

*வேண்டிய கால அளவும் தண்டனையின் உக்கிரமும் இருக்கும் என்று கூறப்படுகிறது. நல்ல செயல்கள், பல்வேறு வகையான பரிந்து பேசுதல்கள் [வேண்டுதல்கள்], மற்றும் "பரிசுத்தவான்"களின் உதவிகள் இன்னும் பிற செயல்கள் யாவும், அந்த ஆத்துமா உத்தரிப்பு ஸ்தலத்தில் இருக்க வேண்டிய கால அளவைக் குறைக்கும் என்றும் கூறப்படுகிறது.*

*உத்தரிப்பு ஸ்தலம் பற்றிய போதனை பழைய ஏற்பாட்டில் அல்லது புதிய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை, ஆனால் இது தள்ளுபடி ஆகமம் என்று அழைக்கப்படுவதும், ரோமன் கத்தோலிக்க வேதாகமத்தின் ஒரு பகுதியாக இருப்பதுமான புத்தகத்தில் உள்ள கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது, இது ரோமன் கத்தோலிக்கர்களைத் தவிர ஏறக்குறைய மற்ற எல்லாராலும், ஏவுதல் பெறாதது என்று உரிமைகோரப்பட்டுள்ளது, ஆனால் ரோமன் கத்தோலிக்கர்கள் இதை ஏவுதல் பெற்றது என்று உரிமைகோருகின்றனர். இவ்வசனப்பகுதியில், "ஆதலால், பாவங்களினின்று மீட்கப்படும்படி இறந்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது புனிதமும் பயனுள்ள எண்ணமுமாயிருக்கிறது" என்றுள்ளது (2 மக்காபேயர் 12:46).[7] இராபர்ட் C. ப்ரோடெரிக் என்பவர் உத்தரிப்பு ஸ்தலத்தைப் பற்றி, "முன்னதாக மன்னிக்கப்பட்ட பாவங்களுக்குத் தற்காலிகத் தண்டனையைச் சகித்துக்கொள்ள வேண்டிய நிலையாக மற்றும் இடமாக உள்ளது, மற்றும் கிருபையின் நிலையில் மரித்த நபரின் ஆத்துமாவிலிருந்து, அவர் மனந்திரும்பியிராத அற்பப் பாவங்களின் குற்றங்கள் சுத்திகரிக்கப் படுகின்றன; இது ஆயத்தப்படுதல் மற்றும் சுத்திகரிப்பு ஆகியவற்றின் இடமாக உள்ளது. இங்கிருந்து ஆத்துமா நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்லுகிறது" என்று தற்காப்பு வாதம் செய்தார்.[8] இந்த போதனையானது சிலுவையில் இயேசுவின் பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் போதுமான தன்மையை எடுத்துப் போடுகின்றன (1 பேது. 1:18-20) மற்றும் ஒருவர் பரலோகத்தில் பிரவேசிக்கக் கூடுவதற்கு முன்பு மனிதத் தகுதியில் செய்யும் நற்செயல்கள் மற்றும் மனித ரீதியான பாடுகள் அவசியமாகின்றன என்று ஏற்படுத்துகின்றன - இது வேதாகமத்தில் மறுத்துரைக்கப்படுகின்ற ஒரு போதனையாக உள்ளது (எபே. 2:8; தீத்து 3:5). இந்த போதனையானது, பாதாளத்தில் உள்ள பெரும் பிளப்பு கடக்கப்படக் கூடாததாக உள்ளது என்ற இயேசுவின் போதனைக்கு நேர்மாறானதாகவும் உள்ளது (லூக். 16:22-26).*

*7. "மரித்துப்போன ஒருவருக்காக உயிருள்ள நபர் ஒருவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளலாம்" என்பது ஏழாவது தவறான கருத்தாக உள்ளது. இந்த போதனையானது பெரும்பாலும் 1 கொரிந்தியர் 15:29 என்ற கடினமான வசனப்பகுதியின்மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது: "மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?" இந்த அமைவில் பவுல், உயிர்த்தெழுதல் பற்றிய விவாதங்களை முன்வைத்தார். அவர், பின்புள்ள வாழ்வைக் குறித்துச் சிலர் எவ்வாறு நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதைக் காண்பித்தார். மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறும்*

*பழக்கத்தை அவர் குறிப்பிட்டார் என்றால், அதை அவர் அங்கீகரித்தார் என்று அர்த்தமல்ல, ஆனால் கல்லறைக்கும் அப்பால் ஒரு வாழ்வு உள்ளது என்ற அவர்களின் நம்பிக்கையையே அவர் குறிப்பிட்டார். தங்கள் பாவங்களிலேயே மரிப்பவர்களுக்கு வேதாகமம் எந்த நம்பிக்கையையும் அளிப்பதில்லை, ஆனால் அவர்கள் பரலோகம் செல்ல முடியாது என்று சுட்டிக்காண்பிக்கிறது (யோவா. 8:21). மீண்டுமாக நாம், நீதிமான்களுக்கும் துன்மார்க்கருக்கும் இடையில் உள்ள பெரும்பிளப்பு கடக்கப்பட முடியாததாக உள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.*

*1 கொரிந்தியர் 15:29க்கு மற்ற விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன. "மரித்தவர்கள்" என்பது மரித்துப்போன மக்களைக் குறிப்பதற்குப் பதிலாக மக்களின் மரண நிலையைக் குறிப்பிடக்கூடும் என்று கூறப்படுகிறது. இயேசு, "மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று" பவுல் அறிவித்தார் (1 கொரி. 15:12), இது அவர் மரணத்தினின்று எழுந்தார் என்று அர்த்தப்படுகிறது. பிறப்பு வினைச் சொல்லுடன் உள்ள huper என்ற கிரேக்க வார்த்தை "நிமித்தம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "இதன் காரணமாக" என்று அர்த்தப்படலாம் (அப். 9:16; பிலி. 1:29; 2 தெச. 1:5). பல கிறிஸ்தவர்கள், மரணத்தினிமித்தம், அதாவது மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலின் கண்ணோட்டத்தில், மரணத்திற்கு ஆயத்தமாவதற்காக ஞானஸ்நானம் பெற்றனர் என்று பவுல் கூறியிருக்கக்கூடும். அவர்கள் உயிர்த்தெழவில்லையென்றால், அவர்களின் ஞானஸ்நானத்திற்கு மதிப்பு என்ன இருந்தது? இவ்வசனப்பகுதியைப் பற்றி* W. H. T. Dau *அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*[9]

> *இவ்விதமான நடைமுறை தொடக்க காலக் கிறிஸ்தவர்களிடத்தில் மேலோங்கியிருந்தது என்பதற்கு நாம் வரலாற்றிலிருந்து ஆதாரம் எதையும் கொண்டிருப்பதில்லை. கிரேக்க மொழியில்* hyper *என்ற சொல், குறிப்பிட்ட ஒரு நடவடிக்கைக்கு ஒரு நபரைத் தூண்டும் நோக்கம் என்பதையும் வெளிப்படுத்துகிறது. இவ்விஷயத்தில், மரித்தோரால், அதாவது உயிர்த்தெழுவார்கள் என்ற அளவில் இதுவரை மரித்தோரால் என்பது கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பப் பொருளானது பின்வரும் அர்த்தத்தைக் காண்பிக்கிறது: ஒரு நபர், மரித்தோர் நியாயத்தீர்ப்படையும்படி உயிர்த்தெழுவார் என்பதை முன் எதிர்பார்த்து, ஞானஸ்நானத்தை நாடினால், மரித்தோர் உயிர்த்தெழவில்லை என்றால் அவரது ஞானஸ்நானம் மதிப்பற்றதாகிறது.*

*"நமக்கு அன்பானவர்களாயிருந்து மரித்துப் போனவர்கள், நாம் என்ன செய்கின்றோம் என்பதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர்" என்பது இன்னொரு தவறான கருத்தாக உள்ளது. சிலர் தங்களது பூமிக்குரிய நடக்கையானது, தங்களுக்கு அன்பானவர்களாயிருந்து மரித்துப் போனவர்களைக் கவலையடைய அல்லது திகைப்படையச் செய்யும் என்று அஞ்சுகின்றனர். இந்தக் காரணத்தினால், இவர்கள் அவர்களுடன் பேச முயற்சி செய்கின்றனர் அல்லது அவர்களைப் பிரியப்படுத்துமென்று*

தாங்கள் நினைப்பவற்றைச் செய்கின்றனர். இருப்பினும், பூமியில் என்ன செய்யப்படுகிறது என்பதை மரித்தவர்கள் இனியும் அறிவதில்லை.

நியாயத்தீர்ப்புக்கு அவசியமிராது என்பது கடைசியான தவறான கருத்தாக உள்ளது. இந்த விவாதமானது, "துன்மார்க்கரும் நீதிமான்களும் பாதாளத்தில் ஏற்கனவே பிரிக்கப்பட்டு இருக்கின்றனர் என்றால், நியாயத் தீர்ப்பு நாள் என்ற ஒன்றுக்கு அவசியமே இல்லை" என்று சொல்லுகிறது. இயேசு, தம்முடையவர்கள் யார் என்பதை ஏற்கனவே அறிகின்றார் (யோவா. 10:15, 27; 2 தீமோ. 2:19). நியாயத்தீர்ப்பு நாள் அன்று, நாம் பரலோகம் செல்ல வேண்டுமா அல்லது நரகம் செல்ல வேண்டுமா என்பதில் இயேசு வியப்படைய/திகைப்படைய மாட்டார். அந்த வேளையில் இயேசு நமக்குத் தீர்ப்புகளைக் கூறுவார், மற்றும் நம்மிடம் உள்ள நமது பதிவேடுகளைப் பார்வையிடுவார் (மத். 25:31-46).

## முடிவுரை

மரித்தவர்கள் இப்போது உருவமற்ற ஆத்துமாக்களாகப் பாதாளத்தில், பரதீசிலோ அல்லது வேதனையுள்ள இடத்திலோ காத்திருக்கின்றனர். மரித்தோரின் உயிர்த்தெழுதல் வரையிலும் அவர்கள் இருக்கின்ற இடத்தி லேயே இருக்கும்படிக்குப் பெரும் பிளப்பு ஒன்று அவர்களுக்கிடையில் உண்டாக்கப்பட்டுள்ளது. இது வரையிலும் அவர்கள் பரலோகத்திற்கு ஏறிச் செல்லவுமில்லை (அப். 2:34) அல்லது நரகத்திற்கு இறங்கிச் செல்லவுமில்லை. இன்னும் நேரம் இருக்கின்றபோதே நாம் மரிப்பதற்கும் இந்த இடை நிலைக்குச் செல்லுவதற்கும் தயாராகிக் கொள்வோமாக (2 கொரி. 6:2).

**பாதாளம்**




---

குறிப்புகள்

[1]ஆதி. 35:18ன்-படி, மரணத்தின்போது ஆத்துமா உடலை விட்டுப் பிரிகின்றது; அது போலவே பிர. 12:7 மற்றும் யாக். 2:26ன்-படி, ஆவியும் உடலை விட்டுப் பிரிகிறது. அதிகமான தகவல்களுக்கு "சரீரம், ஆத்துமா மற்றும் ஆவி" என்ற பாடத்தில் காணவும். [2]செப்துவஜிந்த் என்பது கி.மு. 300-200ல் எகிப்து நாட்டின் அலெக்சந்திரியா என்ற நகரில் கல்வியாளர்கள் எழுபத்திரண்டு பேரால் கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாடு ஆகும். [3]மத். 7:26; 11:16; 13:31, 33, 44, 45, 47, 52 ஆகிய வசனங்களைக் காணவும். [4]லூக். 10:30-37; 15:3-7, 8-10, 11-32 ஆகிய வசனங்களைக் காணவும். [5]லூக். 1:5; 6:1; 7:2, 41; 8:2, 27; 9:57; 11:1, 27, 37; 12:16; 13:6, 31; 14:1, 2, 16; 15:11; 16:1 ஆகிய வசனங்களைக் காணவும். [6]யாத். 22:18; லேவி.19:26, 31; 20:6; உபா. 18:11; 2 இரா. 21:6; 23:24; ஏசா. 8:19, 20 ஆகிய

*வசனங்களைக் காணவும்.* [7]*மக்காபேயர் என்ற இரண்டு தள்ளுபடியாகமங்களும் கி.மு. 166-40ல் சுதந்திரத்திற்காக யூதர்களின் போராட்டம் பற்றிய வரலாற்றைக் கொண்டுள்ளன.* [8]Robert C. Broderick, "Purgatory," *Concise Catholic Dictionary* (St. Paul, Minn.: Catechetical Guild Educational Society, 1943), 143. [9]W. H. T. Dau, "Baptism," *The International Standard Bible Encyclopedia,* vol. 1, ed. G. W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979), 426.